முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1649

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.04.2024,** வியாழக்கிழமை

1. ஓங்கார ஞான தத்துவமே
ஓங்காரன் என் அவதாரமே
ஓங்கார ஞானியே அரங்கனே
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 22 ம் நாள், 04.04.2024, வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் இந்த பேருலகம் நன்மை கொள்ள
கனிவேலவன் என் வெளிப்பாட்டை
கலியுகத்தில் உன் வழிபாட்டின் வழி மக்கள் அடைய
3. அடைய அவதாரம் எடுத்து
அகிலமெங்கும் சரவணச்சுடர் பரவும் வண்ணம்
மகிழவே மக்களுக்கு ஞானமதை
மரணமில்லா பெருவாழ்வாக அருளுகின்ற
4. அருளுகின்ற குருராஜனே ஆறுமுக அரங்கனே
வருமுலகில் உன் ஞானத்தின் வழி வையகமே ஞான லோகமாகக்கூடும்
தருகின்ற குணம் பெருகி உலகோரெல்லாம்
தர்மவான்களாக நிரம்பி இனிதே
5. இனிதே இந்த கலியுகம் ஞான யுகமாகவும்
இணையில்லாத தர்ம யுகமாகவும்
ஆறுமுக அரங்கன் உன் ஆற்றல்பட
அகிலத்தில் சத்திய யுகமாற்றம் கண்டு
6. கண்டுமே உலகோர் பாதுகாப்புப் பெறும் வண்ணம்
கலியுகம் ஞான யுகமாகி இனிதே
அழியாமை பெற்ற மக்கள் ஆளுகின்ற வண்ணம்
ஆற்றலும் அற்புதமும் அகில மாற்றமாகக் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—